Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 315	உள்ளூர் - 15.11.2026	ஞாயிற்றுக்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 315	வெளியூர் - 16.11.2026	திங்கட்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

கடக ராசி: ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்?

மத்திய அரசு நிறுவனத்தில் 350 பணியிடங்கள்!

ரேஷன் பணியாளர் தற்காலிக நியமனம்!

முதல்வர் விஜய்க்கு பாராட்டு விழா!

டிரம்ப் - ஷி ஜின்பிங் - புதின் சந்திப்பு!



வாஷிங்டன், நவ. 15–

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் ஆகியோர் பங்கேற்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க முத்தரப்பு சந்திப்பு, சீனாவின் ஷென்சென் நகரில் வரும் வியாழக்கிழமை (நவ. 19) நடைபெறவுள்ளது.

உலகளாவிய புவிசார் அரசியலில் மிகவும் சிக்கலான காலகட்டத்தில் நடைபெறும் இச்சந்திப்பின்போது, உலகளாவிய அணு ஆயுதக் குறைப்பு, ஈரானுக்கு எதிரான அமெரிக்க–இஸ்ரேல் போர் ஆகிய முக்கிய விவகாரங்கள் குறித்து டிரம்ப் விவாதிக்கவுள்ளதாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஒலிவியா வேல்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா–ரஷியா இடையிலான கடைசி அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தமான 'நியூ ஸ்டார்ட்' கடந்த பிப்ரவரி மாதம் காலாவதியான நிலையில், சீனாவையும் உள்ளடக்கிய புதிய முத்தரப்பு அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும் என டிரம்ப் வலியுறுத்தி வருகிறார். ஆனால், அமெரிக்கா மற்றும் ரஷியாவிடம் தலா 5,000–க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள் உள்ள நிலையில், அதை ஒப்பிடுகையில் தங்களிடம் 600–க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள் மட்டுமே இருப்பதாகக் கூறி, இந்தப் பேச்சுக்குச் சீனா தயக்கம் காட்டி வருகிறது.

மேலும், வர்த்தகம் மற்றும் வணிகத்தை மையமாகக் கொண்டு சீனா நடத்தும் அபெக் மாநாட்டின்போது, அணு ஆயுதக் குறைப்பு குறித்துப் பேச வேண்டும் என டிரம்ப்பின் முன்மொழிவு சீனாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. உலகின் 21 பொருளாதார நாடுகளை ஒன்றிணைக்கும் அபெக் மாநாட்டை, தனது தொழில்நுட்ப மற்றும் பொருளாதார வளர்ச்சியைப் பறைசாற்றும் களமாகச் சீனா பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது. அந்த வகையில், இந்த முத்தரப்பு சந்திப்பு, அபெக் மாநாட்டின் முக்கியத்துவத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடும் எனச் சர்வதேச அரசியல் பார்வையாளர்களும் கருதுகின்றனர்.

இதனால், இச்சந்திப்பில் உடனடியாக எந்தவொரு பெரிய உடன்பாடும் எட்டப்படும் எனத் தாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றும், இது எதிர்காலப் பேச்சுக்கான ஒரு தொடக்கமாக மட்டுமே இருக்கும் என்றும் வெள்ளை மாளிகை மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அதேபோல், இச்சந்திப்பில் ரஷியா–உக்ரைன் போர் குறித்து விவாதிக்கப்படவும் வாய்ப்பு இல்லை எனத் தெரிகிறது. உக்ரைன் விவகாரத்தில் சீனா நேரடித் தொடர்பில் இல்லாததால், அங்கு அதுகுறித்துப் பேசுவது பொருத்தமாக இருக்காது என அந்த அதிகாரி விளக்கமளித்துள்ளார். இருப்பினும், 'எங்களுக்குத் தெரியாமல் உக்ரைன் விவகாரம் குறித்து மூவரும் ரகசிய உடன்பாடு எட்டக்கூடும்' என உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி கவலை தெரிவித்துள்ளார்.

வரலாற்று முக்கியத்துவமான சந்திப்பு: சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷிய அதிபர் புதின் ஆகியோர், கடந்த 2013 முதல் இதுவரை 40–க்கும் மேற்பட்ட முறை நேரில் சந்தித்துப் பேசியுள்ளனர். டிரம்ப் மற்றும் புதின் 7 முறையும், டிரம்ப் மற்றும் ஷி ஜின்பிங் 8 முறையும் இதற்கு முன்பு இருதரப்பு பேச்சுகளை நடத்தியுள்ளனர். ஆனால், மூன்று தலைவர்களும் ஒரே மேடையில் சந்திப்பது சர்வதேச அரசியலில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதையொட்டி, இந்தச் சந்திப்பு கடந்த 1945–ஆம் ஆண்டு நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க 'யால்டா மாநாட்டுடன்' ஒப்பிடப்படுகிறது. ஆனால், இத்தகைய ஒப்பீடுகளை ரஷிய அதிபரின் கிரெம்ளின் மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் நிராகரித்துள்ளார். ஷென்சென் சந்திப்பில் எட்டப்படும் எந்தவொரு முடிவையும் மற்ற நாடுகள் மீது திணிக்க முடியாது என்றும், பரஸ்பர மரியாதையின் அடிப்படையிலேயே உலக ஒழுங்கு அமைய வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆசியப் பயணத்துக்காக அமெரிக்காவில் இருந்து திங்கள்கிழமை புறப்படும் டிரம்ப், சீனாவைத் தொடர்ந்து பிலிப்பின்ஸுக்கும் செல்லவுள்ளார். அதேநேரம், மிகவும் எதிர்பார்க்கப்படும் வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன் உடனான சந்திப்புக்கான திட்டம் எதுவும் இப்பயணத்தில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறு கடைகளிலும் இனி டிஜிட்டல் வேகம்!

கியூஆருக்கு ₹300; சவுண்ட்பாக்ஸுக்கு ₹750! சேவை வழங்கும் வங்கிகளுக்கு ஊக்கத்தொகை!

வியாபாரிகளின் செலவைக் குறைக்க புதிய திட்டம்!!



புதுடெல்லி, நவ. 15–

இந்தியாவில் சிறு வியாபாரிகளிடையே டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை விரிவுபடுத்த, 'யூபிஐ வியாபார் சக்சம்' திட்டத்தை தேசிய கொடுப்பனவுக் கழகம் (NPCI) அறிமுகப்படுத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. சிறு நகரங்கள் மற்றும் கிராமப்புறக் கடைகளில் கியூஆர் கோடு, சவுண்ட்பாக்ஸ் பயன்பாட்டை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், தகுதியான புதிய வியாபாரிகளின் கடைகளில் நிறுவப்படும் ஒவ்வொரு கியூஆர் கோடுக்கும் ₹300, சவுண்ட்பாக்ஸ் சாதனத்துக்கு ₹750 ஊக்கத்தொகை வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது.

முக்கியமாக, இந்தத் தொகை வியாபாரிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படாது. யூபிஐ வசதியை ஏற்படுத்தும் வங்கிகள் அல்லது சேவை வழங்குநர்களுக்கே வழங்கப்படும்.

இதன்மூலம், வியாபாரிகள் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை வசதியைப் பெறுவதற்கான செலவு குறைய வாய்ப்புள்ளது. முந்தைய நிதியாண்டில் ₹40 லட்சம் வரை விற்றுமுதல் கொண்ட, புதிதாக யூபிஐ சேவையில் இணையும் சிறு வியாபாரிகள் தகுதிபெறுவார்கள் எனச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியான வியாபாரிகளுக்கு மொபைல் எண்ணின் அடிப்படையில் தனித்துவமான வணிக அடையாள எண் வழங்கப்பட வேண்டும். கடையின் இருப்பிடம் பதிவு செய்யப்படுவதுடன், தொடர்ந்து 90 நாட்கள் சேவையைப் பயன்படுத்துவது உள்ளிட்ட நிபந்தனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் 60 லட்சம் முதல் ஒரு கோடி புதிய கியூஆர் கோடுகளையும், ஐந்து முதல் பத்து லட்சம் சவுண்ட்பாக்ஸ்களையும் பயன்பாட்டுக்குக் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சவுண்ட்பாக்ஸ் மூலம் பணம் வந்ததை வியாபாரிகள் குரல் அறிவிப்பாக உடனடியாக அறிந்துகொள்ள முடியும். பணம் செலுத்தப்பட்டதா என்பதை உறுதிசெய்வதில் இந்த வசதி உதவும். புதிய வணிகர்களை இணைப்பதோடு, அவர்கள் தொடர்ந்து டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதையும் இத்திட்டம் ஊக்குவிக்கிறது.

தகுதி, சாதனக் கட்டணம் மற்றும் சேவை நிபந்தனைகளை வியாபாரிகள் தங்கள் வங்கியிடம் கேட்டறியலாம். ஊக்கத்தொகை இருப்பதால் அனைத்து வசதிகளும் இலவசம் எனக் கருதாமல், பொருந்தும் கட்டணங்களை முன்கூட்டியே உறுதிப்படுத்துவது அவசியம். சிறு வணிகங்களின் டிஜிட்டல் அணுகலை மேம்படுத்தும் முயற்சியாக இந்தத் திட்டம் பார்க்கப்படுகிறது. இதன் நடைமுறைப் பலன், வங்கிகள் வழங்கும் சலுகைகளைப் பொறுத்தே அமையும்.

பழங்குடியினர் கௌரவ நாள்: பிர்சா முண்டாவின் படத்துக்கு பிரதமர், குடியரசுத் தலைவர் மரியாதை!



புதுடெல்லி, நவ. 15–

பழங்குடியினர் கௌரவ நாளை முன்னிட்டு, பிர்சா முண்டாவின் படத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி, குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

சுதந்திரப் போராட்ட வீரரும், பழங்குடியினத் தலைவருமான பிர்ஸா முண்டாவின் 151–ஆவது பிறந்த நாள் ஞாயிற்றுக்கிழமை (நவ.15) கொண்டாடப்படுகிறது. பிர்சா முண்டாவின் பிறந்தநாள், பழங்குடியினர் கௌரவ நாளாகக் கடந்த 2021–இல் இருந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

இதைத் தொடர்ந்து, பிர்சா முண்டாவின் பிறந்தநாளை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் பழங்குடியினக் கலைஞர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் குடியரசுத்தலைவர் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். பழங்குடியின மக்களின் இசைக்கருவியை பிரதமர் மோடி வாசித்தார்.

மேலும், இந்த நிகழ்வில் குடியரசு துணைத்தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் மற்றும் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா ஆகியோர் பங்குபெற்றனர்.

இந்த நிலையில், பழங்குடியினர் கௌரவநாளை முன்னிட்டு, ரூ. 3,000 கோடி மதிப்பீட்டிலான 246 பழங்குடியினர் நலத் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் நடைபெறும் எஸ்சிஓ கூட்டம்: பாகிஸ்தான் பங்கேற்பதாக அறிவிப்பு!



புதுடெல்லி, நவ. 15–

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) சார்பில் நாகரிகங்களுக்கிடையேயான கலந்துரையாடல் மாநாடு வரும் நவம்பர் 20 முதல் 22–ஆம் தேதி வரை புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு எஸ்சிஓ அமைப்பில் இடம்பெற்றுள்ள அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் இந்தியா அழைப்பு விடுத்திருந்தது. இதில் பாகிஸ்தானும் அடங்கும்.

இந்நிலையில், மாநாட்டில் பாகிஸ்தான் சார்பில் அந்நாட்டின் காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்புத் துறை அமைச்சர் டாக்டர் முசாதிக் மசூத் மாலிக் பங்கேற்பார் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

நாகரிகங்களுக்கு இடையிலான உரையாடலை ஊக்குவிப்பதுடன், எஸ்சிஓ அமைப்பின் மூலம் உறுப்பு நாடுகளுக்கு இடையேயான மக்கள் தொடர்புகளை மேம்படுத்துவதில் பாகிஸ்தான் உறுதியாக இருப்பதாகவும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023–ஆம் ஆண்டு மே மாதம் கோவாவில் நடைபெற்ற எஸ்சிஓ வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் அப்போதைய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரி பங்கேற்றிருந்தார். அதன்பிறகு பாகிஸ்தான் அமைச்சர் ஒருவர் இந்தியா வருவது இதுவே முதல்முறையாகும்.

இந்த மாநாட்டின் மூலம் உறுப்பு நாடுகளுக்கு இடையே கலாசாரம், கலை, இலக்கியம், பாரம்பரியம் உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர புரிதலையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி நவம்பர் 20–ஆம் தேதி தொடங்கி வைக்க உள்ளார்.

உத்தரப் பிரதேச தேர்தல்: 181 தொகுதிகளை கேட்கும் காங்கிரஸ்!



புதுடெல்லி, நவ. 15–

உத்தரப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட காங்கிரஸ் கட்சி 181 தொகுதிகளைக் கேட்பதாக சமாஜவாதி தலைவர் அகிலேஷ் யாதவ் தகவல் தெரிவித்துள்ளார்.

தில்லியில், பிரபல ஆங்கில நாளிதழ் நடத்திய மாநாட்டில், சமாஜவாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் கலந்துகொண்டு பேசினார். அவரிடம் காங்கிரஸ் கட்சியுடனான உறவு, இந்தியா கூட்டணி குறித்த கேள்விகள் கேட்கப்பட்டன.

அப்போது காங்கிரஸ் 100 தொகுதிக்கும் மேல் போட்டியிடப் போவதாக அவரிடம் கேட்கப்பட்டது. இதுகுறித்து அவர் பேசுகையில், "காங்கிரஸ் கட்சியுடனான கூட்டணி உறவு மிகவும் நல்ல நிலையில் இருக்கிறது.

நீங்கள் சொல்வதைவிட இரட்டிப்பாக கேட்டிருக்கிறார்கள். மொத்தமுள்ள 403 தொகுதிகளில் 181 தொகுதிகளில் போட்டியிட காங்கிரஸ் கட்சி கேட்டுள்ளது" என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் குறிப்பாக உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸ், சமாஜவாதி கூட்டணி மொத்தமுள்ள 80–ல் 43 தொகுதிகளில் இந்தக் கூட்டணி வெற்றி பெற்று 43.52 சதவிகித வாக்குகளைப் பெற்றது.

2019–ஆம் ஆண்டில் பாஜகவின் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 62 ஆக இருந்த நிலையில், 2024–ல் 33 ஆகக் குறைந்தது. இதனால், 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன் முறையாக நாடாளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களை பாஜகவால் பெற முடியாமல் போனது.

காங்கிரஸ் போட்டியிட்ட 17 இடங்களில் 6 தொகுதிகளில் வெற்றி பெற்று 9.46 சதவிகித வாக்குகளைப் பெற்றது. 2027 சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், சமாஜவாதி கட்சி தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணிக்கும் இடையே முக்கியப் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் 7 இடங்களை வெற்றி பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி, 2022 உத்தரப் பிரதேசத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு இரண்டு இடங்களை மட்டுமே வென்றது. 2022–ஆம் ஆண்டில் 399 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் வெறும் 2.33 சதவிகித (21.51 லட்சம் வாக்குகள்) வாக்குகளை மட்டுமே பெற்றது. அதே தேர்தலில் 399 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர்கள் 387 இடங்களில் தங்களது வைப்புத்தொகையை இழந்தனர்.

தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 15.11.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 29-ம் தேதி

விமர்சனத்திலும் மனிதநேயம் வேண்டும்!



கருத்துகளைப் பகிர்வதற்கும் தவறுகளைக் கேள்வி கேட்பதற்கும் சமூக வலைதளங்கள் பெரும் வாய்ப்பை வழங்கியுள்ளன. ஆனால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தும் விதத்தில் பொறுப்பும் மனிதநேயமும் இருக்கின்றனவா என்ற கேள்வியை இன்றைய இணையச் சூழல் எழுப்புகிறது. ஒரு கருத்தை மறுப்பதற்கும், அதைப் பகிர்ந்தவரை அவம திப்பதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் மறந்துவிடக் கூடாது.

சமூக ஊடகங்களில் நிதி சார்ந்த கருத்துகளைப் பகிர்ந்த இளைஞர் ஹரிஷின் மறைவு குறித்த செய்தி துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது மரணத்திற்கான காரணங்களை உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின்றி முடிவுசெய்வதும், ஊகங்களைப் பரப்புவதும் பொறுப்பான அணுகுமுறையாகாது. அதேவேளையில், இணையத்தில் தனிநபர்கள் எதிர்கொள்ளும் அவதூறு, மிரட்டல், தொடர்ச்சியான அவமதிப்பு ஆகியவற்றைப் பற்றிய விவாதத்தைச் சமூகம் தீவிரமாக முன்னெடுக்க வேண்டும்.

பொதுவெளியில் கருத்துச் சொல்பவர்கள் கேள்விகளுக்கும் விமர்சனங்களுக்கும் பதிலளிக்கும் பொறுப்புடையவர்கள். குறிப்பாக, மக்களின் பணம் தொடர்பான கருத்துகளைப் பகிரும்போது தகுதி, தகவல்களின் நம்பகத்தன்மை, அபாயங்கள் ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவது அவசியம். தவறான தகவல்கள் சுட்டிக்காட்டப்பட வேண்டும்; தேவையான இடங்களில் உரிய அமைப்புகளிடம் புகார் அளிக்கப்பட வேண்டும். இதற்குப் பதிலாக வசைபாடுவதும் குடும்பத்தினரை இழுப்பதும் எந்தத் தவறையும் திருத்தப் போவதில்லை.

இணையப் புகழை வெற்றியின் அளவுகோலாகக் கருதும் போக்கும் மறுபரிசீலனைக்கு உரியது. பின்தொடர்பவர்களின் எண்ணிக்கையும் பாராட்டுகளும் ஒரு மனிதரின் முழு வாழ்க்கையை விவரிப்பதில்லை. பொதுவெளியில் தன்னம்பிக்கையுடன் தோன்றுபவருக்கும் சோர்வு, அச்சம், தனிப்பட்ட சிக்கல்கள் இருக்கலாம். எப்போதும் வெற்றியாளராகத் தோன்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பை உருவாக்குவது ஆரோக்கியமான சமூகப் பண்பாகாது.

உதவி கேட்பதை அவமானமாகப் பார்க்கும் மனநிலையும் மாற வேண்டும். நெருக்கடியில் இருப்பவர் பேசும்போது குற்றம்சாட்டாமல் கேட்கும் குடும்பமும் நட்பு வட்டமும் அவசியம். கல்வி நிறுவனங்களிலும் பணியிடங்களிலும் மனநல ஆதரவை எளிதில் அணுகும் வாய்ப்புகள் உரு வாக்கப்பட வேண்டும். தேவைப்படும் நேரத்தில் தகுதியான நிபுணரின் உதவியை நாடுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

சமூக வலைதள நிறுவனங்களுக்கும் இதில் பொறுப்பு உண்டு. மிரட்டல்கள், தனிப்பட்ட தகவல்கள் வெளியிடப்படுதல், ஒருங்கிணைந்த துன்புறுத்தல் போன்ற புகார்களை விரைந்து கையாள வேண்டும். புகார் அளிக்கும் நடைமுறைகள் எளிமையாகவும், எடுக்கப்படும் நடவடிக்கைகள் தெளிவாகவும் இருக்க வேண்டும்.

கருத்துச் சுதந்திரத்தின் மதிப்பு, அதை நாம் பொறுப்புடன் பயன்படுத்துவதில்தான் வெளிப்படுகிறது. ஆதாரத்துடன் கேள்வி கேட்போம்; தவறுகளைத் திருத்தக் கோருவோம்; பதிலளிக்கும் வாய்ப்பையும் வழங்குவோம். திரைக்கு அப்பால் உணர்வுகளுடன் ஒரு மனிதர் இருக்கிறார் என்ற புரிதல், நாம் எழுதும் ஒவ்வொரு சொல்லிலும் இருக்கட்டும்.

ஆசிரியர்
மதுரை மணி

குழந்தைகள் தினவிழா!




மதுரை வடக்குப் பெருமாள் மேஸ்திரி வீதியில் உள்ள காவல் துறை நல்லுறவு மன்றத்தில் மதுரை மாநகர காவல்துறை ஆணையர் திரு ராஜேந்திரன் அவர்கள் உத்தரவின்படி திலகர் திடல் காவல் நிலையம் சார்பாக குழந்தைகள் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது விழாவில் திலகர் திடல் சரகம் துணை ஆனையர் பழனிச்சாமி, தலைமையில் ஆய்வாளர் ஜோதிபாசு, உதவி ஆய்வாளர் சந்திராதேவி, சிறப்பு சார்பு ஆய்வாளர் முரளிகண்ணன், தலைமைக்காவலர் வினோத்குமார் காவல்நிலைய எழுத்தர் ராதாகிருஷ்ணன் மற்றும் நல்லுறவுமன்ற ஒருங்கிணைப்பாளர் நித்தியா ஆகியோர் கலந்துகொள்ள அப்பகுதியை சார்ந்த நிலா இலக்கிய மன்றத் தலைவர் கவிக்குயில் கணேசன் கவிதைகள் பாடி சிறப்புறையாற்றிட பகுதி சமூக ஆர்வலர்கள் வடிவேலு, விவேக், சக்திவேலு, முருகன் ஆகியோர் கலந்து கொள்ள விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு இனிப்பும் , பரிசுகளும் வழங்கிப் பாராட்டினர்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் நித்திய சுமங்கலி மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற விடையாற்றி கட்டளை பூஜையில் அமைச்சர் லோகேஷ் தமிழ்ச்செல்வன் பங்கேற்று சாமி தரிசனம் செய்தார். அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து, இரவில் புஷ்ப அலங்காரத்தில் அம்மன் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர்.

காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்ற புயல் சின்னம்!



சென்னை, நவ. 15–
தென்கிழக்கு வங்கக் கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) சனிக்கிழமை அதிகாலை 5.30 மணி அளவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து, (நவ. 15) அதே பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. தொடர்ந்து, இது மேலும் வடக்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து தெற்கு வங்கக் கடலின் மத்திய பகுதிகள் மற்றும் அதையொட்டிய மத்திய மேற்கு வங்கக் கடலில் நாளை (நவ.16) மாலை 'அக்வான்' புயலாக உருவாக வாய்ப்பு ள்ளது. இந்தப் புயல் சின்னம் இது ஸ்ரீ விஜய புரம் (போர்ட் பிளேர் – அந்தமான் தீவுகள்) நகரிலிருந்து மேற்கு–தென்மேற்கே சுமார் 700 கி.மீ தொலைவிலும், சென்னையிலிருந்து தென்கிழக்கு–தென்கிழக்கே 860 கி.மீ தொலைவிலும், விசாகப்பட்டினத்திலிருந்து தெற்கு–தென்கிழக்கே 1040 கி.மீ தொலைவிலும், கோபால்பூரிலிருந்து (ஒடிசா) தெற்கு – தென்கிழக்கே 1160 கி.மீ தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.

இது தொடர்ந்து, வடக்கு–வடமேற்கு திசையில் நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் வலுவடைந்து, நவம்பர் 16–ல் தெற்கு மற்றும் அதனை ஒட்டிய மேற்கு–மத்திய வங்கக் கடல்பகுதியில் 'அக்வான் புயலாகவும்', நவ. 17 ஆம் தேதி மேற்கு–மத்திய வங்கக் கடல்பகுதியில் 'தீவிர புயலாகவும்' வலுப்பெறும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த வானிலை சூழல்கள் காரணமாக, ஞாயிற்றுக்கிழமை (நவ. 15) மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் மாவட்டங்கள் மற்றும் கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. வட உள்மாவட்டங்கள் மற்றும் ஏனைய தமிழகத்தில் வறண்ட வானிலையே நிலவும்.

பொங்கல் பண்டிகை: சில நிமிஷங்களிலேயே விற்றுத் தீர்ந்த ரயில் டிக்கெட்கள்!



சென்னை, நவ. 15–
அடுத்தாண்டு (2027) ஜன.15–ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) பொங்கல் பண்டிகை கொண்டாடப்படவிருக்கிறது. ஜன. 14–ஆம் தேதி போகி, 16–ஆம் தேதி மாட்டுப்பொங்கல், 17–ஆம் தேதி காணும் பொங்கல் ஆகிய பண்டிகைகளும் அடுத்தடுத்து உள்ளன.

பொங்கல் பண்டிகையையொட்டி, சென்னையில் பணியாற்றும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அரசு மற்றும் தனியார் ஊழியர்கள் தங்களது சொந்த ஊர்களுக்குச் செல்ல வசதியாக ரயில்களில் 60 நாள்கள் முன்னே டிக்கெட் முன்பதிவு செய்யலாம்.

அதன்படி, ஜன.14–ஆம் தேதி சென்னையிலிருந்து தங்கள் சொந்த ஊர்களுக்குப் புறப்பட டிக்கெட் முன்பதிவு ஞாயிற்றுக்கிழமை (நவ. 15) காலை 8 மணிக்கு ஐஆர்சிடிசி இணையதளம் வழியாகவும், ரயில் நிலையங்களில் வரிசை யில் நின்று பயணிகள் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்தனர்.

ரயில் டிக்கெட் முன்பதிவுக்கான ஐஆர்சிடிசி இணையதளம் வழக்கம் போல முடங்கிய நிலையில், சிறிது நேரத்தில் டிக்கெட்டுகள் விற்றுத்தீர்ந்தன. சென்னையில் இருந்து மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய ஊர்களுக்கு புறப்படும் பாண்டியன், நெல்லை, பொதிகை, முத்துநகர் விரைவு ரயில்களின் 2–ஆம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளிலும், வந்தே பாரத், வைகை விரைவு ரயிலில் 2–ஆம் சிட்டிங், சிசி உள்ளிட்ட இருக்கை களுக்கான டிக்கெட்டுகள் 5 நிமி ஷங்களுக்குள் விற்றுத்தீர்ந்தன. சில ரயில்களுக்கான முன்பதிவில் ரெக்ரெட் வந்ததால் பலரும் வருத்தத்துக்குள்ளாகினர்.

ஆந்திராவை நோக்கி அக்வான் புயல்!

சென்னை, நவ. 15–
அக்வான் புயல் எங்கே கரையைக் கடக்கும் என்பது குறித்த தகவலை தனியார் வானிலை ஆய்வாளர் பிரதீப் ஜான் தெரிவித்துள்ளார். வானிலை நிலவரம் தொடர்பாக, தமிழ்நாடு வெதர்மேன் என்று அறியப்படும் பிரதீப் ஜான் தெரிவித்திருப்பதாவது:

"இன்னும் 4 நாள்கள்தான் உள்ளன! நாளைய வானிலை மாதிரிகளின் கணிப்புகள், வலுப்பெற்றுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் நகர்வை வைத்து, சென்னை மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களில் மழை வாய்ப்பு மற்றும் புயல் கரையைக் கடக்கக்கூடிய இடம் ஆகியவை குறித்து தெளிவான தகவல்கள் கிடைக்கும்.

செய்யறிவு வானிலை மாதிரிகள், வட தமிழ்நாட்டிற்குச் சாதகமாக உள்ளன. அதேசமயம், வழக்கமான வானிலை மாதிரிகள் (Operational Models) ஆந்திரப் பிரதேசத்தை நோக்கி இந்த அமைப்பு நகரும் எனக் காட்டுகின்றன.

ஒருவேளை புயல் ஆந்திரப் பிரதேசத்தை நோக்கிச் சென்றாலும், நெல்லூர் அருகே கரையைக் கடந்தால் சென்னை மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களுக்கு ஓரளவு மழைப்பொழிவு கிடைக்க வாய்ப்புள்ளது.

ஆனால், புயல் கரையைக் கடக்கும் இடம் மேலும் வடக்கே நகர்ந்து ஓங்கோல் அல்லது மசூலிப்பட்டினம் பகுதிகளை நோக்கிச் சென்றால், சென்னை மற்றும் சுற்றுவட்டார மாவட்ட பகுதிகளுக்குக் கிடைக்க வேண்டிய மழை கிடைக்காமல் போகலாம்.

புயல் சின்னம் வலுப்பெற்றதால், வடக்கு நோக்கிய நகர்வு உறுதியாகத் தெரிகிறது. அதேசமயம், இது வலுவடையாத, பலவீனமான காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக இருந்தால் சென்னை மற்றும் வட தமிழக பகுதிகளுக்கு மழை கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த அமைப்பு நெல்லூர் அல்லது அதற்குத் தெற்குப் பகுதியில் கரையைக் கடந்தால் மட்டுமே வட தமிழ்நாட்டிற்கு மழை கிடைக்கும். டெல்டா மாவட்டங்கள் மற்றும் தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கு இந்த அமைப்பால் மழை கிடைக்காது" என்று குறிப்பிட்டுள்ளார்.

கந்த சஷ்டி விழா: குவிந்த பக்தர்கள்!



சென்னை, நவ. 15–
கந்த சஷ்டி திருவிழாவை முன்னிட்டு தமிழ்நாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற பல்வேறு முருகன் கோயில்களில் பக்தர்கள் அதிக அளவில் குவிந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

திருச்செந்தூர், பழனி, திருத்தணி உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு முருகன் கோயிலில் கந்த சஷ்டி திருவிழா கடந்த நவ. 10ஆம் தேதி கொடி யேற்றத்துடன் தொடங்கியது.

திருச்செந்தூரில் சனிக்கிழமை காலை சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி, தெய்வானையுடன் யாகசாலையில் எழுந்தருளினார். அங்கு கும்பங்கள் வைக்கப்பட்டு, சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் நடைபெற்றது. மதியம் மூலவருக்கு உச்சிகால அபிஷேகம் முடிந்து, தீபாராதனை நடைபெற்றவுடன் யாகசாலையில் மகா தீபாராதனை நடைபெற்றது.

அதேபோன்று, பழனி, சென்னையில் வடபழனி உள்ளிட்ட கோயில்களிலும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. விழாவின் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் (நவ. 15) நடைபெறுகிறது.

இதேபோட்டி, திருச்செந்தூர் கோயில் நடை அதிகாலை 1 மணிக்கு திறக்கப்பட்டு, விஸ்வரூப தரிசனம், மற்ற கால பூஜைகள் நடைபெற்றன. மாலை 4 மணியளவில் கோயில் கடற்கரையில் சூரசம்ஹாரம் நடைபெற்றது. கந்த சஷ்டி விழாவையொட்டி கோயிலில் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் பக்தர்களும் குவிந்து வருகின்றனர்.

சென்னையில் வடபழனி திருப்போரூர், சிறுவாபுரி, பண்ருட்டி உள்ளிட்ட முருகன் கோயில்களிலும் திரளான பக்தர்கள் பங்கேற்று நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்து வருகின்றனர். வடபழனியில் பால்குடம், காவடி எடுத்து வரும் பக்தர்களுக்கு தனி வரிசை வழங்கப்பட்டு நிலையில், முதியோர், கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகளுக்கும் தனி வரிசை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மதுரை காவல் நிலையத்தில் லாரி ஓட்டுநர் தற்கொலை: காவலர்கள் 3 பேருக்கு சிபிசிஐடி சம்மன்!



மதுரை, நவ. 15–
மதுரை செக்கானூரணி காவல் நிலையத்தில் விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட லாரி ஓட்டுநர் பாலகிருஷ்ணன் மரண விவகாரத்தில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட 3 போலீஸாருக்கு சிபிசிஐடி காவல் துறை, சம்மன் அனுப்பியுள்ளது.

காவல் ஆய்வாளர் முத்து, தலைமைக் காவலர்கள் பழனிவேல் ராஜன், கலைச்செல்விக்கு ஆகிய மூவருக்கு சிபிசிஐடி போலீஸார் சம்மன் அனுப்பியுள்ளனர்.

கடக ராசி: ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்?





2026 ஆம் ஆண்டு ராகுகேது பெயர்ச்சியில், கடக ராசியினருக்கு ஜென்ம ராசியில் கேதுவும், ஏழாம் இடத்தில் ராகுவும் சஞ்சரிப்பதாக ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. இந்த அமைப்பு குடும்ப உறவுகள், திருமணம், வேலை மற்றும் கூட்டுத் தொழில் சார்ந்த விஷயங்களில் கவனமாகச் செயல்பட வேண்டிய காலமாகக் கருதப்படுகிறது.

சிதம்பரம் ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையத்தைச் சேர்ந்த ஜோதிடர் எம். சிவராஜன் வழங்கியதாக சமயம் தமிழ் வெளியிட்டுள்ள பலன்களின் அடிப்படையில், கடக ராசியினருக்கான முக்கியக் கணிப்புகள் வருமாறு:

பணியிடத்தில் பொறுமையே பலம்

பணியில் புதிய பொறுப்புகள் கிடைக்கக்கூடும். அதே நேரத்தில், சக ஊழியர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் அமைதியாகக் கையாள்வது நல்லது. குழுவுடன் இணைந்து செயல்படுவதும், தெளிவாகக் கருத்துகளைப் பகிர்வதும் பணிச்சூழலை மேம்படுத்த உதவும் எனக் கணிக்கப்படுகிறது.

கூட்டுத் தொழிலில் கூடுதல் கவனம்

புதிய தொழில் முயற்சிகள் மற்றும் கூட்டுத் தொழில் தொடர்பான முடிவுகளை அவசரமின்றி அணுக வேண்டிய காலமாக இது கூறப்படுகிறது. பணப் பரிவர்த்தனைகள், பொறுப்புகள் மற்றும் கணக்குகளில் வெளிப்படைத்தன்மை இருப்பது அவசியம். அதிக லாபம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் உடனடியாக முடிவெடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதே கணிப்பின் சாரம்.

செலவுகளைத் திட்டமிடுவது அவசியம்

வருமானம் இருந்தாலும், எதிர்பாராத செலவுகள் சேமிப்பைப் பாதிக்கக்கூடும் எனக் கூறப்படுகிறது. குடும்பத் தேவைகள் மற்றும் பிள்ளைகளின் கல்விக்கான செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, செலவுகளுக்கு முன்னுரிமை அளித்து திட்டமிடுவது முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது.

குடும்பத்தில் புரிதல் தேவை

வாழ்க்கைத் துணையின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதும், பெற்றோர் மற்றும் உடன்பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வதும் உறவுகளில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கக்கூடும் என்பதால், அவற்றைப் பகிர்ந்து செயல்படுவது உதவியாக இருக்கும்.

திருமணத்திற்காக வரன் தேடுபவர்களுக்கு புதிய அறிமுகங்கள் கிடைக்க வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்படுகிறது. இருப்பினும், திருமண முடிவுகளை அவசரப்படாமல், பரஸ்பர புரிதலுடன் எடுப்பது நல்லது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களுக்கு கூடுதல் முயற்சி

படிப்பில் கவனத்தைத் தக்கவைக்க மாணவர்கள் கூடுதல் நேரம் ஒதுக்க வேண்டியிருக்கலாம். திட்டமிட்டுப் படிப்பதும், தொடர்ச்சியான பயிற்சியும் முக்கியத்துவம் பெறும். வெளியூர் அல்லது வெளிநாட்டில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை எதிர்பார்ப்பவர்களுக்கு சாதகமான சூழல் அமையக்கூடும் என்றும் கூறப்படுகிறது.



பழனி முருகன் மலைக் கோவிலில் கந்த சஷ்டி திருவிழாவை முன்னிட்டு முருகப்பெருமான் தங்க சப்பரத்தில் மேளதாளம் முழங்க அழைத்துவரப்பட்ட காட்சி.



சர்வ சக்தி ஜன பேரவை நிறுவனத் தலைவர் சுரேஷ் சுவாமிகள் இல்ல திருமண விழாவில் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துக்களை தெரிவித்தனர் இந்த விழாவில் திமுக மத்திய மாவட்ட கழக செயலாளர் க.செல்வராஜ். அதிமுக மாநகர் மாவட்ட செயலாளர் வேல் குமார் சாமிநாதன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சேலஞ்சர் துரை. கே என் விஜயகுமார். அதிமுக நிர்வாகி ஆன்மீக செம்மல் சூர்யா செந்தில் உள்ளிட்ட முக்கிய அரசியல் கட்சி நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் பங்கேற்றனர்..

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



மாரடைப்பு அறிகுறிகள்: உடனடி சிகிச்சை உயிரைக் காப்பாற்றும்!



மாரடைப்பின் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, உடனடியாக மருத்துவ உதவி பெறுவது உயிரைக் காப்பாற்ற உதவும். நெஞ்சில் வலி, அழுத்தம் அல்லது இறுக்கம், மூச்சுத்திணறல், குளிர்வியர்வை, தலைச்சுற்றல், குமட்டல் மற்றும் அசாதாரண சோர்வு ஆகியவை கவனிக்க வேண்டிய அறிகுறிகளாகும்.

கைகள், முதுகு, கழுத்து அல்லது தாடையில் ஏற்படும் வலியும் மாரடைப்புடன் தொடர்புடையதாக இருக்கலாம். சிலருக்கு நெஞ்சுவலி இல்லாமல்கூட மற்ற அறிகுறிகள் தோன்றக்கூடும். பெண்களுக்கு மூச்சுத்திணறல், குமட்டல், முதுகுவலி மற்றும் வழக்கத்திற்கு மாறான சோர்வு போன்றவை ஏற்படலாம்.

மாரடைப்பு எப்போதும் முன்கூட்டியே எச்சரிக்கை கொடுக்கும் என்பது சரியல்ல. சில மாரடைப்புகள் திடீரெனவும் தீவிரமாகவும் ஏற்படும்; மற்றவை லேசான வலி அல்லது அசௌகரியத்துடன் மெதுவாகத் தொடங்கலாம். நெஞ்சில் ஏற்படும் அசௌகரியம் சில நிமிடங்களுக்கு மேல் நீடிக்கலாம் அல்லது மறைந்து மீண்டும் வரலாம்.

இத்தகைய அறிகுறிகள் ஏற்பட்டால், அவை தானாகக் குறையும் எனக் காத்திருக்காமல் உடனடியாக ஆம்புலன்ஸ் உதவியை நாட வேண்டும். மாரடைப்புதானா என்ற சந்தேகம் இருந்தாலும் அவசர மருத்துவப் பரிசோதனை அவசியம். தாங்களே வாகனம் ஓட்டிச் செல்வதைத் தவிர்ப்பது நல்லது.

ஆம்புலன்ஸ் மருத்துவக் குழுவினர் வந்தவுடன் சிகிச்சையைத் தொடங்க முடியும். விரைவாகச் செயல்படுவது இதயத் தசைக்கு ஏற்படும் சேதத்தைக் குறைக்கவும் உயிரைக் காப்பாற்றவும் உதவும். எனவே, அறிகுறிகளை அலட்சியப்படுத்தாமல் உரிய நேரத்தில் அவசர உதவி பெறுவதே முக்கியம். அறிகுறிகளின் தீவிரம் ஒவ்வொரு வருக்கும் மாறுபடலாம் என்பதால், வலி கடுமையாகும் வரை காத்திருப்பதும் ஆபத்தான தாமதத்தை ஏற்படுத்தலாம்

மதுரை தனியார் நகைக்கடை கொள்ளை வழக்கு: இருவருக்கு நவ. 29 வரை நீதிமன்ற காவல்!



மதுரை, நவ. 15– மதுரை பழங்காநத்தம் புறவழிச் சாலையில் உள்ளது தனிஷ்க் நகைக் கடையிலிருந்த ஏறத்தாழ 1875 பவுன் நகைகள் (15 கிலோ) கடந்த வியாழக்கிழமை அதிகாலை கொள்ளையடிக்கப்பட்டன. கடையின் மின்தூக்கி அமைப்புக்காக அமைக்கப்பட்டிருந்த துவாரம் வழியாக உள்ளே நுழைந்த மர்ம நபர் ஒருவர் கொள்ளையில் ஈடுபட்டது கண்காணிப்பு கேமரா பதிவுகள் மூலம் கண்டறியப்பட்டன.

இதையடுத்து, மதுரை மாநகரக் காவல் துறை சார்பில், 3 தனிப் படைகள் அமைக்கப்பட்டு தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கடையிலிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை துல்லியமாக போலீஸார் ஆய்வு செய்ததில், கடந்த ஒரு வாரத்துக்கு முன்பே ஓர் மர்ம நபர் மின்தூக்கி துவாரம் வழியாக கடைக்குள் இறங்கி ஒத்திகைப் பார்த்தது தெரியவந்தது.

இதையடுத்து, போலீஸார் மேற்கொண்ட விசாரணையில் அவர், பழங்காநத்தம் அருட்பெருஞ்ஜோதி தெருவைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர் நிஷாந்த் என்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து, வெள்ளிக்கிழமை நிஷாந்தின் வீட்டுக்குச் சென்ற தனிப்படை போலீஸார் தீவிர விசாரணை, சோதனைகளை மேற்கொண்டனர்.

நிஷாந்த் ஏற்கெனவே தலைமறைவாகியிருந்த நிலையில், வீட்டிலிருந்த அவரது தந்தையான ஆட்டோ ஓட்டுநர் சுரேஷிடம் போலீஸார் தீவிர விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில், வியாழக்கிழமை காலை நிஷாந்த் தன்னை அழைத்து ஒரு பையை அளித்ததாகவும், பிறகு அவரே வந்து அந்தப் பையை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, மாடக்குளம் கண்மாய்ப் பகுதியில் ஓர் இளைஞர் தன்னுடைய கருப்பு நிற மழை அங்கி உள்ளிட்ட சில ஆடைகளை தீயிட்டு எரித்துவிட்டு ஆட்டோவில் திரும்பிச் சென்றதாகவும் போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

இந்தத் தகவலின் பேரில் அங்கு சென்று போலீஸார் விசாரித்தபோது, தங்க நகைகளை கொள்ளையடித்தது நிஷாந்த் என்பதையும், கொள்ளையடித்தபோது அணிந்திருந்த உடைகளை அவர் தீயிட்டு எரித்ததையும் காவல்துறை அதிகாரிகள் உறுதி செய்தனர்.

பின்னர், நிஷாந்தின் தோழியும் மதுரை திருப்பாலையைச் சேர்ந்த யூடியூபருமான மீனாட்சி நாச்சியாரிடம் தனிப் படை போலீஸார் விசாரணை மேற்கொண்டனர். இதில், அவருக்கும் கொள்ளையில் தொடர்பு இருப்பது தெரியவந்தது. தொடர் விசாரணையில், கொள்ளையடித்த நகைகளை மாடக்குளம் கண்மாய்ப் பகுதியில் நிஷாந்த் பதுக்கி வைத்திருப்பதாக மீனாட்சி நாச்சியார் தெரிவித்ததையடுத்து, அவரை கண்மாய்ப் பகுதிக்கு அழைத்துச் சென்ற போலீஸார், அங்கு புதைக்கப்பட்டிருந்த தங்க நகைகளைக் கைப்பற்றினர்.

இதையடுத்து, நிஷாந்தின் தந்தை சுரேஷ், மீனாட்சி நாச்சியார் ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து கொள்ளை வழக்கில் கைது செய்யப்பட்ட நிஷாந்தின் தந்தை சுரேஷ் மற்றும் மீனாட்சி ஆகிய இருவரையும் வரும் நவ. 29 ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி சங்கீதா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதைத்தொடர்ந்து சுரேஷ், மீனாட்சி நாச்சியார் இருவரையும் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

த.வெ.க.வின் 2-ம் கட்ட கல்வி விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெறும் தேதி அறிவிப்பு!



சென்னை, நவ. 15– த.வெ.க. சார்பில் ஆண்டு தோறும் பொதுத்தேர்வில் மாவட்ட மற்றும் சட்டசபை தொகுதி வாரியாக முதல் 3 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, சான்றிதழ், பரிசளிப்பு விழா நடத்தப்பட்டு வருகிறது. புதுச்சேரி மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகிறது. அந்தவகையில், 4–வது ஆண்டாக, பரிசளிப்பு விழா கடந்த 4 ஆம் தேதி நடந்தது. சென்னையை அடுத்த நீலாங்கரையில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் நடந்த விழாவுக்கு கட்சியின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஆனந்த் தலைமை தாங்கினார். த.வெ.க. தலைவரும், தமிழக முதல்–அமைச்சருமான விஜய் பங் கேற்று மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய சட்டசபை தொகுதிகளில் முதல் 3 இடங்களை பிடித்த மாணவர்கள் பங்கேற்றனர். இந்த நிலையில், இரண்டாம் கட்ட விருது வழங்கும் நிகழ்ச்சி வரும் 18–ஆம் தேதி நடைபெறுகிறது. சென்னை நீலாங்கரையில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட விழாவில் 5 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்க உள்ளனர். விழாவில் பங்கேற்கும் மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கி முதல் அமைச்சர் விஜய் கவுரவிக்க உள்ளார்.

சொத்துக்குவிப்பு வழக்கு: சி.விஜயபாஸ்கருக்கு அமலாக்கத்துறை மீண்டும் சம்மன்!



சென்னை, நவ. 15– 2016 முதல் 2021–ஆம் ஆண்டு வரை சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த விராலிமலை தொகுதி முன்னாள் எம். எல்.ஏ.வான சி. விஜயாஸ்கர், வருமானத்திற்கு அதிகமாக ரூ. 35.79 கோடி சொத்து சேர்த்ததாகக் கூறி, 2021–இல் லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்திருந்தது.

இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அமலாக்கத்துறை பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணையைத் தொடங்கியது.

இதையடுத்து, கடந்த மார்ச் 21–ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் உள்ள விஜயபாஸ்கரின் இல்லத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. நிகழாண்டு தொடக்கத்தில் விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவிக்கு சம்மன் அனுப்பப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்கில் விசாரணைக்காக, சென்னை மண்டல அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (நவ. 6) ஆஜராக வேண்டும் என விஜயபாஸ்கருக்கு அமலாக்கத்துறை ஏற்கெனவே சம்மன் அனுப்பிய நிலையில் அவர் ஆஜராகவில்லை.

இதனால், அமலாக்கத்துறை தற்போது மீண்டும் சம்மன் அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

9 துறைமுகங்களில் 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்!



சென்னை, நவ. 15– வங்கக்கடலில் நிலவி வந்த ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது அடுத்த 36 மணி நேரத்தில் 'அக்வான்' புயலாக வலுப்பெற வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வாளர் ஹேமச்சந்தர் தெரிவித்துள்ளார்.

இந்த புயல் 24–36 மணி நேரத்திற்கு வடக்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து, பின்னர் நவம்பர் 16 மற்றும் 17–ம் தேதிகளில் தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலை கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது நவம்பர் 19–ம் தேதி இரவு அல்லது 20–ம் தேதி அதிகாலையில் எண்ணூர் – கடலூர் இடையே கரையைக் கடக்க வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இதனால் வடதமிழகக் கடலோரப் பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக சென்னை, எண்ணூர், காட்டுப்பள்ளி, கடலூர், நாகை, பாம்பன், தூத்துக்குடி, புதுச்சேரி, காரைக்கால் ஆகிய 9 துறைமுகங்களில் 1–ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மேலும், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ரேஷன் பணியாளர் தற்காலிக நியமனம்!



சென்னை, நவ. 15– மகளிர் சுயஉதவி குழுவினரை கொண்டு ரேஷன் கடை பணியாளர்கள் தற்காலிகமாக நியமனம் செய்வது குறித்து கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். இதுகுறித்து கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் லதா, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் மற்றும் அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கு அனுப்பி உள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கூட்டுறவு துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் ரேஷன் கடைகளில் கடந்த ஆகஸ்டு 31–ந்தேதி நிலவரப்படி 1,714 விற்பனையாளர் பணியிடங்கள், 176 கட்டுனர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இக்காலி பணியிடங்களால் விற்பனையாளர்கள் கூடுதல் பொறுப்பில் பணிபுரிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு ரேஷன் அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் பொது வினியோகத் திட்ட பொருட்களை வினியோகிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் மூலம் பணியாளர்களை தேர்வு செய்வது சட்டப்பூர்வமான நடைமுறை என்பதால் காலதாமதம் ஏற்படும்.


எனவே அதுவரையிலான இடைப்பட்ட காலத்தில் பொது வினியோகத் திட்டத் பணிகள் தடை இன்றி நடைபெற மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு காலிப்பணியிட ரேஷன் கடைகளை தற்காலிகமாக நடத்துவதற்கான நிலையான செயல்முறை நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி சுய உதவிக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்ய மாவட்ட கலெக்டர் தலைமையில் மண்டல இணைப்பதிவாளர்கள், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் தகுதியான சுய உதவி குழுக்களை கண்டறிந்து உறுப்பினர்களின் தகுதி களை சரிபார்த்து நியமனம் செய்வார்கள்.

இதற்காக விற்பனையாளர் பணிக்கு 12–ம் வகுப்பு தேர்ச்சி அடைந்த வர்களையும், கட்டுனர் பணிக்கு 10–ம் வகுப்பு தேர்ச்சி அடைந்தவர்களையும் ரேஷன் கடை அமைந்துள்ள பகுதியில் எல்லைக்குள் வசிப்பவராகவும் குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இல்லாதவராகவும், அரசு மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் ஏற்கனவே பணியில் இல்லாதவராகவும், சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் இயக்குனர்கள், பணியாளர்களின் நெருங்கிய உறவினர் அல்லாதவராகவும் இருக்கும் நபர்களை தெரிவு செய்து அவர்களிடம் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்களை பெற வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு ரேஷன் கடை விற்பனை தொடர்பான அடிப்படை பயிற்சி வழங்கி தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் நபர்களிடம் இந்த ஒதுக்கீடு முற்றிலும் தற்காலிகமானது என்பதை தெளிவாக தெரிவிக்க வேண்டும். மேலும் சங்கம் நிர்ணயிக்கும் பிணை வைப்புத் தொகை ரூ.10 ஆயிரம் மற்றும் ஒரு லட்சத்திற்கான நம்பக உத்தரவாத காப்பீடு ஆகியவை சங்கத்தால் பெறப்படும் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.400 வீதம் மாதம் ஒன்றுக்கு அதிகபட்சமாக விற்பனையாளருக்கு ரூ.7,500 மற்றும் கட்டுனர்களுக்கு ரூ.6,600–க்கு மிகாமல் ஊதியம் சம்பந்தப்பட்ட சங்கத்தால் அவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடிக்காக வழங்கப்படும். மண்டல இணை பதிவாளர் உடன் மேற்கண்ட பணிகளை ஒருங்கிணைந்து விரைந்து மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தண்டவாளங்களில் அத்துமீறி நுழையக்கூடாது: ரெயில்வே பாதுகாப்பு படை எச்சரிக்கை!



சென்னை, நவ. 15– ரெயில்வே பாதுகாப்புப் படை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

அனுமதியின்றி ரெயில் தண்டவாளங்களை கடப்பது, தண்டவாளங்களுக்கு அருகில் நடந்து செல்லும்போது செல்போன் அல்லது இயர்போன்களை பயன்படுத்துவது மற்றும் ஓடும் ரெயில்களில் ஏறவோ அல்லது இறங்கவோ முயற்சி செய்வது போன்ற ஆபத்தான செயல்களாலேயே பெரும்பாலான விபத்துகள் நிகழ்கின்றன. எனவே, பொதுமக்கள் நடைமேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் மற்றும் சிக்னல் வழிகாட்டுதல்களை முழுமையாகப் பின்பற்றி பாதுகாப்பான முறையில் பயணிக்க வேண்டும். நடப்பாண்டு அக்டோபர் மாதம் வரை ரெயில் மோதிய விபத்துகளில் சிக்கி மொத்தம் 185 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 175 பேர் தண்டவாளங்களில் அத்துமீறி நுழைந்ததன் காரணமாகவே விபத்துகளில் சிக்கியுள்ளனர். மேலும், கடந்த 2024–ம் ஆண்டில் 276 விபத்துகளும், 2025–ம் ஆண்டில் 237 விபத்துகளும் நிகழ்ந்துள்ளன.

அனுமதியின்றி ரெயில்வே வளாகத்தில் நுழைவது, 1989–ம் ஆண்டு ரெயில்வே சட்டத்தின் 147–வது பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். இச்சட்டத்தின்படி, இதற்கு 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை, ரூ.1,000 வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும். அவசர காலங்களில் அல்லது மருத்துவ உதவிகள் தேவைப்படும் வேளையில் பொதுமக்கள் 139 என்ற ரெயில்வே உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு

மத்திய அரசு நிறுவனத்தில் 350 பணியிடங்கள்!



பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்தில் 350 தகுதிகாண் பருவப் பொறியாளர் (Probationary Engineer) பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த மத்திய அரசு நிறுவனத்தின் நிரந்தரப் பணியிடங்களுக்கு இணையவழியில் விண்ணப்பிக்கலாம். தேர்வு செய்யப்படுபவர்கள் இந்தியா முழுவதும் பணியமர்த்தப்படுவார்கள்.

விவரம் தகவல்
நிறுவனத்தின் பெயர் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்
அறிவிப்பு எண் 17556/HR/All–India/2026
பணி வகை மத்திய அரசு வேலை
வேலைவாய்ப்பு வகை நிரந்தரப் பணி
மொத்த காலியிடங்கள் 350 தகுதிகாண் பருவப் பொறியாளர் பணியிடங்கள்
பணியிடம் இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடங்கும் நாள் 28.10.2026, பிற்பகல் 2.00 மணி
விண்ணப்பிக்கக் கடைசி நாள் 18.11.2026, இரவு 11.59 மணி
விண்ணப்பிக்கும் முறை இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம் bel–india.in

விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, வயது வரம்பு, சம்பளம், விண்ணப்பக் கட்டணம் மற்றும் தேர்வு முறை உள்ளிட்ட விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் படித்துத் தெரிந்துகொண்டு விண்ணப்பிக்க வேண்டும்.

முடக்கப்பட்ட சொத்துகளை பத்திரப்பதிவு செய்ய முடியாது-ஐகோர்ட்!



சென்னை, நவ. 15– கோயம்புத்தூரில் வருமான வரித்துறையாலும், சிவில் நீதிமன்ற உத்தரவுகளாலும் முடக்கப்பட்டுள்ள சொத்தை மகேஷ் கண்ணன் என்பவர் வாங்கியுள்ளார். முடக்கப்பட்ட சொத்து என்பதால் அதன் விற்பனை பத்திரத்தை பதிவு செய்ய சார்பதிவாளர் மறுத்துள்ளார். இதை எதிர்த்து மகேஷ் கண்ணன் தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு தனி நீதிபதி, "மோசடி அல்லது போலியான ஆவணங்கள் தொடர்பான பத்திரப்பதிவுகளுக்கு மட்டுமே பதிவுச் சட்டம் பிரிவு 22–B தடையாக இருக் கிறது. எனவே, மனுதாரரின் விற்பனைப் பத்திரத்தை சார் பதிவாளர் உடனடியாக பதிவு செய்யவேண்டும்" என்று உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், அசிக் அலி, அஜ்ஜூர் முகமது ஆகியோர் மேல்முறை யீடு செய்தனர். அதில், இந்த சொத்தை முடக்கம் செய்ய நாங்கள் உத்தரவு பெற்றிருந்தோம் என்று கூறியிருந்தனர். இந்த வழக்கை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஆர்.ராஜேஷ் விவேகானந்தன் ஆகியோர் விசாரித்தனர்.

மனுதாரர்கள் தரப்பில் மூத்த வக்கீல் அசன் முகமது ஜின்னா ஆஜராகி, "நீதி மன்றம் மற்றும் வருமான வரித்துறையால் முடக்கப்பட்டுள்ள சொத்து விற்ப னையை பதிவு செய்ய, பத்திரப் பதிவு சட்டம் தடை செய்கிறது. சொத்து முடக்கப்பட்டிருக்கும் நிலையில், அதற்கான விற்பனைப் பத்திரத்தைப் பதிவு செய்ய தனி நீதிபதி உத்தரவிட்டது சட்டத்திற்கு முரணானது" என்று வாதிட்டார்.

இதற்கு எதிர் மனுதாரர் தரப்பில் எதிர்ப்பு தெரிவித்து வாதிடப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், "வருமான வரித்துறை அல்லது நீதிமன்றத்தால் முடக்கப்பட்ட சொத்துகள் தொடர்பான விற்பனை ஆவணங்களைப் பத்திரப்பதிவு செய்ய முடியாது. அதற்குச் சட்டரீதியான தடை உள்ளது. சார்பதிவாளர், ஒரு ஆவணத்தைப் பதிவு செய்ய மறுத்தால், அதனை எதிர்த்து மேல் முறையீடு செய்ய சட்டத்தில் மாற்றுத் தீர்வுகள் உள்ள நிலையில், நேரடி யாக ஐகோர்ட்டில் வழக்குத் தொடர முடியாது. எனவே, தனி நீதிபதி உத்தரவை ரத்து செய்கிறோம். தனி நீதிபதியின் உத்தரவின் அடிப்படையில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த விற்பனைப் பத்திரத்தையும் ரத்து செய்கிறோம்" என்று உத்தரவிட்டனர்.




இஸ்மாயில் லக்கி டூராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



இன்றைய கார்ட்டூன்



பிரிட்டன் குடியுரிமை பெற்றார் ஐபிஎல் நிறுவனர் லலித் மோடி!



புதுடெல்லி, நவ. 15–

ஐபிஎல் தொடரின் நிர்வாகத்தில் எழுந்த நிதி முறைகேடு மற்றும் பணமோசடி புகார்கள் தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்து, 2010–ஆம் ஆண்டு மே மாதம் லலித் மோடி இந்தியாவை விட்டு வெளியேறினார்.

இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்) கிரிக்கெட் தொடரின் நிறுவனரும் முன்னாள் தலைவருமான லலித் மோடி, தான் அதிகாரப்பூர்வமாக பிரிட்டன் குடியுரிமை பெற்றுவிட்டதாக அறிவித்துள்ளார். கடந்த 2026 செப்டம்பர் 15–ஆம் தேதியே பிரிட்டன் குடியுரிமைக்கான சான்றிதழைப் பெற்றுவிட்டதாகவும், இது தனது வாழ்க்கையின் மிகவும் பெருமைக்குரிய மற்றும் தனிப்பட்ட மைல்கல் என்றும் அவர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு யூனியனில் உரையாற்றியபோது, இந்தத் தகவலை அவர் பொதுவெளியில் பகிர்ந்து கொண்டார். மேலும், தனது சமூக வலைதளப் பக்கங்களிலும் இது குறித்த விரிவான பதிவை வெளியிட்டுள்ளார்.

தனது குடியுரிமை விழாவை குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய நண்பர்கள் முன்னிலையில் கொண்டாடியதாக லலித் மோடி குறிப்பிட்டுள்ளார். பிரிட்டன் பல ஆண்டுகளாகத் தனது தாயகமாக இருந்து வருவதாகக் கூறியுள்ள அவர், அந்நாட்டின் மக்கள், ஜனநாயக அமைப்புகள், பாரம்பரியம் மற்றும் விழுமியங்கள் மீது தனக்கு ஆழ்ந்த மரியாதையும் வியப்பும் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் குடிமகனாக மாறியிருப்பது ஒரு கவுரவம் மட்டுமல்ல, அது ஒரு பெரிய பொறுப்பு என்றும், அதனைப் பெருமையுடனும் நன்றியுணர்வுடனும் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு கலாச்சார அனுபவங்களால் செதுக்கப்பட்ட தனது வாழ்க்கைப் பயணத்தில், தான் இப்போது பெருமையுடன் தாயகம் என்று அழைக்கும் பிரிட்டனுக்குத் தொடர்ந்து நேர்மறையான பங்களிப்புகளை வழங்க விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மன்னர் மூன்றாம் சார்லஸின் பிறந்தநாளன்று இந்த முக்கிய அறிவிப்பைப் பகிர்ந்து கொண்டது தனக்கு மிகவும் சிறப்பான தருணம் என்று லலித் மோடி நெகிழ்ந்துள்ளார். தனது உரையையும் சமூக வலைதளப் பதிவையும் பிரிட்டனின் பாரம்பரிய வாழ்த்து வாசகமான "கடவுள் மன்னரைக் காப்பாராக" என்ற வார்த்தைகளுடன் அவர் நிறைவு செய்துள்ளார்.

ஐபிஎல் தொடரின் நிர்வாகத்தில் எழுந்த நிதி முறைகேடு மற்றும் பணமோசடி புகார்கள் தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்து, 2010–ஆம் ஆண்டு மே மாதம் லலித் மோடி இந்தியாவை விட்டு வெளியேறினார். கடந்த 16 ஆண்டுகளாக லண்டனில் வசித்து வந்த அவர், இதற்கு முன்பு தென் பசிபிக் தீவு நாடான வனுவாட்டு குடியுரிமையைப் பெற முயற்சித்ததும், பின்னர் அந்நாட்டுப் பிரதமரால் அவரது பாஸ்போர்ட் ரத்து செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நீண்ட கால சட்ட மற்றும் குடியேற்ற நடைமுறைகளுக்குப் பிறகு, தற்போது பிரிட்டன் குடியுரிமையை அவர் அதிகாரப்பூர்வமாகப் பெற்றுள்ளார்.

உயிருக்கு ஆபத்து என அச்சம்: பாதுகாப்பான இடத்திற்கு இடம் பெயர்ந்த ஹபீஸ் சயீத்- மசூத் அசார்!

புதுடெல்லி, நவ. 15–

இந்தியாவில் நடந்த பயங்கரவாத தாக்குதல்களுக்கு மூளையாக செயல்பட்ட லஷ்கர்–இ–தொய்பா தலைவர் ஹபீஸ் சயீத், ஜெய்ஷ்–இ–முகமது தலைவரான மசூத் அசார் ஆகியோர் பாகிஸ்தானில் இருக்கிறார்கள்.



ஐ.நா. சபையால் சர்வதேச பயங்கரவாதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள அவர்கள் பாகிஸ்தானில் சுதந்திரமாக திரிகிறார்கள். அவர்களை தேடுப்படும் குற்றவாளிகளாக இந்தியா அறிவித்து உள்ளது. இதற்கிடையே பாகிஸ்தானில் சமீப காலமாக மர்ம நபர்களால் இந்த இரு பயங்கரவாத அமைப்புகளை சேர்ந்தவர்கள் சுட்டு கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் ஹபீஸ் சயீத்– மசூத் அசார் ஆகியோருக்கு இந்திய தாக்குதல் மற்றும் மர்ம நபர்கள் துப்பாக்கி சூடு அச்சுறுத்தல் இருப்பதாக அவர்களை பாதுகாப்பான இல்லங்களுக்கு பாகிஸ்தான் உளவுத் துறையான ஐ.எஸ்.ஐ மாற்றி உள்ளது. இதை இந்திய உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன.

ஹபீஸ் சயீத், லாகூரின் ஜோஹர் டவுனில் உள்ள தனது வீட்டில் இருந்து, ராவல்பிண்டியில் பாகிஸ்தான் ராணுவத் தலைமையகத்திற்கு அருகே உள்ள உயர் பாதுகாப்பு கொண்ட கேரிசன் கிரவுண்ட் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.


அதேபோல் மசூத் அசார், சிந்து மாகாணத்தில் நவாப் ஷாவில் உள்ள ஒரு பலப்படுத்தப்பட்ட இடத்திற்கு மாற்றப்பட்டு உள்ளார். அவர்கள் பாகிஸ்தான் உளவுத்துறை நிர்வகிக்கும் பலத்த பாதுகாப்பு கொண்ட இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஹபீஸ் சயீத் தற்போது லஷ்கர் அமைப்பின் உறுப்பினர்களை நேரில் சந்திப்பதைத் தவிர்த்துவிட்டு ஆடியோ மூலமாக மட்டுமே தொடர்பு கொள்கிறார். ஹபீஸ் சயீத்துக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர் வெளியே செல்வதற்கும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாதத்திற்கு நிதியுதவி அளித்த வழக்குகளில் ஹபீஸ் சயீத் லாகூரின் கோட்லக்பத் சிறையில் தண்டனை அனுபவித்து வருவதாக பாகிஸ்தான் தெரிவித்தது. ஆனால் அவர் பாதுகாப்பான இடத்தில் மிகவும் வசதியாக வாழ்ந்து வருகிறார்.

மசூத் அசாரும் தனது அமைப்பின் உறுப்பினர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதைத் தவிர்த்து வருகிறார். அவர் முக்கிய தளபதிகள் சிலருடன் மட்டுமே தொடர்பில் உள்ளார். மசூத் அசார் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் அவர் ஆப்கானிஸ்தானுக்கு தப்பி சென்றுவிட்டார் என்றும் பாகிஸ்தான் கூறி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத அமைப்புகளின் முக்கிய உள்கட்டமைப்புகள் அழிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் 5 கூடுதல் டி.எஸ்.பி.க்கள், 14 டி.எஸ்.பி.க்கள் இடமாற்றம்!



சென்னை, நவ. 15–

தமிழக போலீஸ்துறையில் 5 கூடுதல் டி.எஸ்.பி.க்கள், 14 டி.எஸ்.பி.க்கள் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளனர். அதன் விவரம் வருமாறு:–

ராமநாதபுரம் கடலோர பாதுகாப்பு குழும கூடுதல் டி.எஸ்.பி. கண்ணன் நெல்லை தலைமையக கூடுதல் டி.எஸ்.பி. யாகவும், திண்டுக்கல் 'சைபர் கிரைம்' கூடுதல் டி.எஸ்.பி. தெய்வம் திருவண்ணாமலை மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு கூடுதல் டி.எஸ்.பி.யாகவும், ராமநாதபுரம் மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு கூடுதல் டி.எஸ்.பி. சுந்தர்ராஜ் திருப்பூர் மாவட்டத்துக்கும், திண்டுக்கல் மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு கூடுதல் டி.எஸ்.பி. ரமேஷ் கன்னியாகுமரி மாவட்டத்துக்கும், சிவகங்கை மாவட்ட தலைமையக கூடுதல் டி.எஸ்.பி. சுகுமார் திண்டுக்கல் மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு கூடுதல் டி.எஸ்.பி.யாகவும் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளனர். தேவக்கோட்டை டி.எஸ்.பி. கண்ணன், சென்னை குற்ற ஆவண காப்பகத்துக்கும், சிவகங்கை மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு டி.எஸ்.பி. புருஷோத்தமன் ஆவடி போலீஸ் கமிஷனரகத்துக்கும் மாற்றப்பட்டனர். இவர்கள் உள்பட 14 டி.எஸ்.பி.க்கள் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்.

சினிமா துளிகள்..!

முதல்வர் விஜய்க்கு பாராட்டு விழா!



தமிழ்நாட்டில் திரையரங்குகளில் 6 மணி காட்சிகளுக்கு அனுமதி வழங்கியதற்காக முதல்வர் விஜய்க்கு பாராட்டு விழா நடத்த ஆலோசித்து வருவதாக தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் திரையரங்குகளில் கடந்த சில ஆண்டுகளாக முதல் காட்சி காலை 9 மணிக்கு தொடங்கும் நடைமுறை இருந்து வந்தது. இந்த நிலையில், பழைய நடைமுறையான 6 மணிக்கு முதல் காட்சியை மீண்டும் கொண்டு வர வேண்டும் என தமிழக அரசுக்கு தயாரிப்பாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து, புதிய படம் வெளியாகும் நாளில் இருந்து ஒரு வாரத்துக்கு தினமும் காலை 6 மணி முதல் மறுநாள் அதிகாலை 2.30 மணி வரை 6 காட்சிகளை திரையிடலாம் என்றும், சனி – ஞாயிறு, உள்ளூர் பண்டிகை, பொதுவிடுமுறை நாள்களிலும் 6 காட்சிகளைத் திரையிட அரசு அனுமதி அளித்தது. தமிழக அரசின் இந்த அறிவிப்புக்கு நன்றி தெரிவித்து செய்தியாளர்களுடன் தயாரிப்பாளர்கள் பேசியதாவது, "காலை 6 மணி காட்சி குறித்த கோரிக்கை வைத்தவுடனேயே அரசு சார்பில் செய்து கொடுத்தனர். இதற்காக தமிழக அரசுக்கும் முதல்வர் விஜய் மற்றும் துறைசார்ந்த அமைச்சர் ராஜ்மோகனுக்கும் நன்றிகள் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெரிய படங்களெல்லாம் தமிழகத்தை தவிர கர்நாடகம், ஆந்திரம், கேரளம் உள்ளிட்ட மாநிலங்களில் காலை 6 மணிக்கே திரையிடப்பட்டு விடுகிறது. ஆனால், தமிழகத்தில் காலை 9 மணிக்குத்தான் திரையிடப்படுகிறது. இந்த இடைவெளியில் திரை விமர்சனங்கள் வெளியாகி திரைப்படங்களும் பாதிக்கப்படுகின்றன.

இதற்கு முன்னர் சிறு திரைப்படங்களுக்கு திரையரங்குகள் கிடைக்காமல் இருந்தது. இனிவரும் காலங்களில் கிடைக்க வாய்ப்பு உள்ளது. முதல்வர் விஜய்க்காக பாராட்டு விழா நடத்தி நிகழ்ச்சி நடத்த ஆலோசித்து வருகிறோம். நிகழ்ச்சிக்கு அவரின் அனுமதியும் கிடைக்க வேண்டும்" என்று தெரிவித்தனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் தலைவர்கள் எஸ்.ஏ. சந்திரசேகரன், கேயார், கலைப்புலி எஸ். தாணு, டி.ஜி. தியாகராஜன், முன்னாள் செயலாளர்கள் ஏ.எல். அழகப்பன், டி. சிவா, முன்னாள் பொருளாளர்கள் கஹஜாமைதீன், சந்திரபிரகாஷ் ஜெயின், வி.சி. குகநாதன், பெப்சி தலைவர் ஆர்.கே. செல்வமணி, தயாரிப்பாளர் ஐசரி கே. கணேஷ், கமிலா நாசர், சங்கத்தின் துணைத் தலைவர் எஸ். கமலக்கண்ணன், செயலாளர் ஆர். ராதாகிருஷ்ணன், பொருளாளர் சுபாஷ் சந்திரபோஸ், இணைச் செயலாளர் சுஜாதா விஜயகுமார், நடிகரும் தயாரிப்பாளருமான தியாகராஜன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

புத்தக கொள்முதல் முறைகேடு: நூலகத் துறை அதிகாரிகள் 5 பேர் பணியிடை நீக்கம்!

சென்னை, நவ. 15–

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை கலைஞர் நூலகத்தில் புத்தக கொள்முதலில் முறைகேட்டில் ஈடுபட்டதாக அலுவலர்கள் 5 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



கோவையில் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட பெரியார் அறிவுலக நூலகத்திற்காக நூல்கள் தேர்வு செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டதில், தகுதியற்ற போலி புத்தகங்கள், ஏஜ மூலம் உருவாக்கப்பட்ட நூல்கள், போலி நூலாசிரியர்கள் மற்றும் போலியான பதிப்பகங்கள் வாயிலாகப் பல கோடி ரூபாய் நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளதாகப் புகார்கள் எழுந்தன.


அதனைத்தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு, ஆய்வு செய்ததில் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை கலைஞர் நூலகங்களில் மோனிகா ரவி என்ற ஒரே எழுத்தாளரின் 162 புத்தகங்கள் உட்பட, லட்சுமி மோகன், தாமரை முரளி, ஜோதி ஹரிஹரன், திரிஷா விஜய், சங்கீதா விஜய் போன்ற பெயர்களில் பல புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன.

இந்த புத்தகக் கொள்முதல் முறைகேடு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்புத்துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. மேலும், அகல்விளக்கு, மீனிக்ஸ் பதிப்பகங்களின் புத்தகங்கள் உள்பட நூலகங்களில் இருந்து சுமார் 70,000–க்கும் மேற்பட்ட போலி புத்தகங்கள் அகற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில், நூல் கொள்முதல் விவகாரத்தில் நூலகத் துறை அலுவலர்கள் 5 பேரை பணியிடை நீக்கம் செய்து பொது நூலக இயக்குநரகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

புத்தக கொள்முதல் கண்காணிப்பு குழுவில் உறுப்பினர்களாக இருந்த அண்ணா நூலக அதிகாரிகள் காமாட்சி, சந்தான கார்த்திகேயன், கலைஞர் நூலக அலுவலர்கள் தினேஷ்குமார், சந்தான கிருஷ்ணன் (பெரியார் நூலக பொறுப்பாளர்), பொது நூலகத் துறை அதிகாரி ஜூலியட் ஆகியோரைப் பணியிடை நீக்கம் செய்து பொது நூலக இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது. இவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற உள்ளது.

சபரிமலை ஐய்யப்பன் கோவில் நடை நவ. 16-ல் திறப்பு!



சபரிமலை, நவ. 15–

எருமேலி, வண்டிப் பெரியாரில் உள்ள உடனடி முன்பதிவு கவுண்டர்கள் மூலம் தலா 2 ஆயிரம் பேருக்கும் தரிசனத்திற்கு அனுமதி அளிக்கப்படும்.

சபரிமலை ஐய்யப்பன் கோவிலில் மண்டல, மகரவிளக்கு பூஜைகள் பிரசித்தி பெற்றவை. இந்த ஆண்டுக்கான மண்டல கால பூஜை வருகிற 17–ந் தேதி தொடங்குகிறது. இதனை முன்னிட்டு (16–ந் தேதி) மாலை 5 மணிக்கு சபரிமலை ஐய்யப்பன் கோவில் நடை திறக்கப்படுகிறது. தந்திரி பிரம்மதத்தன் முன்னிலையில் மேல்சாந்தி பிரசாத் நம்பூதிரி நடையை திறந்து வைக்கிறார். தொடர்ந்து தீபாராதனைக்கு பிறகு புதிய மேல்சாந்திகள் பதவியேற்கின்றனர்.


(17–ந் தேதி) அதிகாலை 3 மணிக்கு நடை திறக்கப்பட்டு மண்டல கால பூஜைகள் தொடங்கும். டிசம்பர் 27–ந் தேதி பிரசித்தி பெற்ற மண்டல பூஜை நடைபெறுகிறது. நாளை 30 ஆயிரம் பேருக்கும், 17–ந் தேதி முதல் தினமும் 80 ஆயிரம் பேருக்கும் தரிசனத்திற்கு அனுமதி அளிக்கப்படும். ஆன்லைன் மூலம் 60 ஆயிரம் பேருக்கும், நிலக்கல்லில் உள்ள உடனடி முன்பதிவு கவுண்டர் மூலம் 10 ஆயிரம் பேருக்கும் எருமேலி, வண்டிப்பெரியார் வனப்பாதை வழியாக செல்லும் பக்தர்களுக்காக ஆன்லைன் மூலம் தலா 3 ஆயிரம் பேருக்கும், எருமேலி, வண்டிப் பெரியாரில் உள்ள உடனடி முன்பதிவு கவுண்டர்கள் மூலம் தலா 2 ஆயிரம் பேருக்கும் தரிசனத்திற்கு அனுமதி அளிக்கப்படும்.

சபரிமலை ஐய்யப்பனை தரிசிக்க பக்தர்கள் குவிந்தாலும், அவர்கள் நிலக்கல்லை தாண்டிச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். நாளை பகல் 12 மணிக்கு பின்னரே அவர்கள் பம்பை செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

ஸ்டார் ஷிப் விண்கலத்தை முதல்முறையாக வெற்றிகரமாக பூமியில் தரையிறக்கி ஸ்பேஸ் எக்ஸ் சாதனை!

வாஷிங்டன், நவ,. 15–

ஸ்டார் ஷிப் விண்கலத்தை முதல்முறையாக வெற்றிகரமாக பூமியில் தரையிறக்கி ஸ்பேஸ் எக்ஸ் சாதனை படைத்துள்ளது.



அமெரிக்காவை சேர்ந்த தனியார் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஸ்பேஸ் எக்ஸ். உலகின் பெரும் பணக்காரரான எலான் மஸ்க்கிற்கு சொந்தமான இந்நிறுவனம் பல்வேறு செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பி வருகிறது. மேலும், மீண்டும் பயன்படுத்தக்கூடிய ராக்கெட்டுகள், விண்கலங்களையும் சோதனை செய்து வருகிறது.

இந்நிலையில், டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார் பேஸ் தளத்தில் இருந்து கடந்த 14ம் தேதி ஸ்டார் ஷிப் 15 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது. சூப்பர் ஹெவி பூஸ்டர் ராக்கெட் மூலம் விண்கலம் ஏவப்பட்ட நிலையில் அதில் 26 அடுத்த தலைமுறை ஸ்டார்லிங் வி 3 செயற்கைக்கோள்கள் கொண்டு செல்லப்பட்டன.

புவி வெளி வட்டப்பாதையில் விண்கலத்தை செலுத்தியப்பின் சூப்பர் ஹெவி பூஸ்டரை மீண்டும் பூமியில் தரையிறக்க ஸ்பேஸ் எக்ஸ் முயற்சித்தது. ஆனால், அந்த முயற்சி தோல்வியடைந்தது.

அதேவேளை, விண்கலத்தில் இருந்த செயற்கைக்கோள்கள் வெற்றிகரமாக பிரிந்து புவி வட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டன. இதையடுத்து, ஸ்டார் ஷிப் 15 விண்கலம் சுமார் 22 மணி நேரம் புவி வட்டப்பாதையில் 14 முறை சுற்றியது. இதனை தொடர்ந்து ஸ்டார் ஷிப் 15 விண்கலத்தை மீண்டும் பூமிக்கு கொண்டு வர செயல்திட்டம் அமல்படுத்தப்பட்டது.

அதன்படி, புவி வட்டப்பாதையில் சுற்றிய ஸ்டார் ஷிப் 15 விண்கலம் மீண்டும் பூமிக்கு திரும்பியது. டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார் பேஸ் தளத்தில் உள்ள ஏவுதள கோபுரத்தின் 'சாப்ஸ்டிக்' எந்திர கைகளை மூலம் முதன்முறையாக விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்க முயற்சி தொடங்கப்பட்டது. புவி வட்டப்பாதையில் இருந்து பூமிக்கு வந்த ஸ்டார் ஷிப் 15 விண்கலம் ஏவுதள கோபுரத்தில் உள்ள எந்திர கைகளில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

புவி வட்டப்பாதைக்கு சென்ற விண்கலம் மீண்டும் பூமிக்கு திரும்பி வெற்றிகரமாக தரையிறங்குவது இதுவே முதல் முறையாகும். இதன் மூலம் விண்கலத்தை மீண்டும் பயன்படுத்தும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் முயற்சிக்கு மிகப்பெரிய வெற்றியாக பார்க்கப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020